டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.01.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 171 - Madurai | Online Edition

# இஸ்ரேலில் நடைபெறும் கடல் உணவு பாதுகாப்பு குறித்து இரண்டாவது உலகளாவிய மாநாட்டில் மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்கிறார்

புது தில்லி, ஜன.13

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங், 2026 ஜனவரி 13 முதல் 15-ம் தேதி வரை இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொள்கிறார். அந்நாட்டின் இலாட் நகரில் நடைபெறவுள்ள 'கடல் உணவு பாதுகாப்பு குறித்த இரண்டாவது உலகளாவிய உச்சி மாநாடு : கடல்சார் எதிர்காலம்' என்ற நிகழ்வில் பங்கேற்க இஸ்ரேல் வேளாண் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அமைச்சர் அவி டிக்டர் அழைப்பின் பேரில் அவர் அங்கு செல்கிறார்.

இப்பயணம் இந்தியா இஸ்ரேல் இடையே வளர்ந்து வரும் உத்திசார்ந்த பொருளாதார உடன்பாட்டை சுட்டிக்காட்டி, மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின துறையில் வலுவான இருதரப்பு ஒத்துழைப்புக்கான இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இம்மாநாட்டில் பங்கேற்பது மட்டுமின்றி, இஸ்ரேல் வேளாண் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் அவி டிக்டர் மற்றும் மாநாட்டில் பங்கேற்கும் இதர நாடுகளின் அமைச்சர்களுடனும் ராஜீவ் ரஞ்சன் சிங் இருதரப்பு பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் நாட்டின் வேளாண், மீன்வளம் மற்றும் கடல்வாழ் உயிரின துறைகளைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரி களையும் அமைச்சர் சந்திக்க உள்ளார்.

# நுண்ணீர் பாசன பயனாளி நிலத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு



அரியலூர், ஜன.13

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி, ஆய்வு மேற்கொண்டார்.

ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் வாணதிரையான்பட்டினம் வருவாய் கிராமத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தில் கீழ் பயனடைந்த மருதகாசி, த/பெ.ரெங்கநாதன், வயலில் நிலக்கடலை பயிர் மற்றும் வரப்பு பயிராக முருங்கை பயிரிட்டுள்ளார். இதனை வேளாண்மை இணை இயக்குநர் பார்வையிட்டு விவசாயியிடம் நுண்ணீர் பாசன பயன்பாடு பலன் குறித்தும், பயிர் விளைச்சல் குறித்தும், ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் வாணதிரையான்பட்டினம் மற்றும் இளையபெருமாள் நல்லூர் ஆகிய வருவாய் கிராமங்களில் மின்னனு பயிர் கணக்கெடுப்பு (Digital Crop Survey) மற்றும் விவசாயிகள் பதிவு (Farmer Registration) நடைபெற்றதை பார்வையிட்டு விரைவாக முடித்திட ஆலோசனைகள் வழங்கி அறிவுறுத்தினார். ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மா.மகேந்திர வர்மன், உதவி வேளாண்மை அலுவலர் ராம்குமார் பினேலெக்ஸ் நுண்ணீர் பாசன நிறுவன ஊழியர் ஆகியோர் உடனிருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நிறைவான மகசூல் பெற தரமான விதையின் பங்கு அவசியம்!

இலாபகரமான விவசாயத்திற்கு அடிப்படை தரமான விதையாகும். விதையின் தரம் என்பது அதன் சுத்தத்தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிறரகக் கலவன் இன்றி இருத்தல் போன்ற வற்றைக் குறிக்கும். நல்ல முளைப்புத்திறன் உள்ள விதைகளே சீராக வளர்ந்து சிறப்பான மகசூல் தரும்.

நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் நெல்லுக்கு 80%, மக்கா சோளம் 90%, சோளம், கம்பு மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு 75%, பயறு வகைகளுக்கு 75%, வெண்டைக்கு 65%, கத்தரி 70%, மிளகாய் 60%, தக்காளி 70%, நிலக்கடலை 70%, வீரிய பருத்தி 75%, ரகப்பருத்தி 65% மற்றும் எள் 80% இருந்தால் மட்டுமே போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும்.

எனவே விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதையின் தரத்தை அறிந்து கொள்ள பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணமாக செலுத்தி விதைப் பரிசோதனை செய்து விதைக்குமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி தெரிவித்துக் கொள்கிறார்கள்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# எருக்கு இலை கரைசல் குறித்து செய்முறை விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடி விவசாயிகளுக்கு இருக்கு இலை கரைசல் செய்முறை பற்றியும் அதன் உபயோகம் மற்றும் நன்மைகள் பற்றியும் விளக்கினர்.

**செய்முறை விளக்கம் :** 4 கிலோ எருக்கு இலைகளை எடுத்து துண்டு துண்டாக நறுக்க வேண்டும். அதனை 20 லிட்டர் தண்ணீர் கொண்ட ஒரு வாளியில் போட்டு நன்கு கிளற வேண்டும். பின்பு அதனை காற்று புகாதவாறு 5 நாட்கள் மூடி வைக்க வேண்டும். 5 நாட்கள் கழித்து நொதித்த பிறகு அதில் டி லிட்டர் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து உபயோகிக்கவும்.

**நன்மைகள் :** போரான் மற்றும் மெக்னீசியம் சத்து அடங்கிய கரைசல் ஆகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும்.

# இயற்கை வேளாண்மை பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



பெரம்பலூர், ஜன.13

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், நக்கசேலம் கிராமத்தில், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர் களான கார்த்திக், கதிர், கவி கிசோர், கவி அரசு, கவியரசு, மணி கண்டன், மாதவன், மதிகணேஷ், மோகன்ராஜ், முத்துப்பாண்டி, நாகராஜ் ஆகியோர் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் நக்கசேலம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். இந்நிகழ்ச்சியில் விவசாயி களுக்கு இயற்கை பொருட்களின் மதிப்பு மற்றும் உயிர் காரணி களின் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.







**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# சிறிய வெங்காயத்திற்கு யூரியா பயன்படுத்தாமல் அமோனியம் சல்பேட் பயன்படுத்த வேளாண் துறை அதிகாரி அறிவுரை



பெரம்பலூர், ஜன.13

பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கண்ணனின் அறிவுரையின்படி தனியார் உர விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார். ஆய்வின் போது அனைத்து வகையான உரங்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். டிஏபி உரத்திற்கு மாற்றாக தற்போது ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் இதில் இரண்டாம் நிலை சத்து கால்சியம் அதிக அளவு உள்ளது. இதனை டி ஏ டி க்கு மாற்றாக அனைத்து நிலத்திற்கும் அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம் என்று கூறினார்.

விவசாயிகளுக்கு உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்கு களுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக் கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், டி ஏ பி அல்லது ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக் காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. சிறிய வெங் காயத்திற்கு யூரியா பயன்படுத்தாமல் அமோனியம் சல்பேட் பயன்படுத்த வேண்டும், இதுதான் சிறந்த உரம். விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம்.



வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும். உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம், என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.




# நெல்லில் தண்டு துளைப்பான் நோய்

## விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

தஞ்சாவூர், ஜன.13

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் பகுதியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் நெல்லில் தண்டு துளைப்பான் நோயைப் பற்றியும், SRI முறையை பற்றியும் அவ்வூர் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அப்போது மாணவிகள் கூறியதாவது, நெல்லில் அதிகமாக தண்டு துளைப்பான், இலைச்சருள் நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும். அதை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா அட்டையை பயன் படுத்துங்கள். இந்த அட்டையை நெல் பயிரிட்ட 30-வது நாளில் அல்லது மூன்று முதல் நான்கு இலைநிலையில் பின் பகுதியில் அட்டையை வைத்து பின்னடிக்க வேண்டும். இதிலிருந்து வெளிவரும் பூச்சி அந்த நோய் தாக்கும் பூச்சியின் உடலில் முட்டையிட்டு அதை இனப்பெருக்கம் அடைவதை தடுக்கும். இதை ஒரு ஏக்கருக்கு 14 சிசி வைக்க வேண்டும் என்றனர்.

பின்னர் SRI முறை என்பது பொதுவாக நாம் நெல் பயிரிடும் முறையை காட்டிலும் சற்று செலவும் குறைவாக காணப்படும். இத்துடன் விளைச்சலும் அதிகமாக இருக்கும். இதில் குறிப்பாக YOSCI என்பது பின்பற்றப்படுகிறது. அதாவது Y என்பது இளம் வயது நாற்றுக்கள், O என்பது ஒரு குழிக்கு ஒரு நாற்று, S என்பது சதுர வடிவில் பயிரிடுதல் (25X25cm), C என்பது கோனோ களை நீக்கியை பயன்படுத்துதல், I என்பது காய்ச்சலும் பாய்ச்சலும் முறையை குறைக்கும். காய்ச்சலும் பாய்ச்சலும் முறை என்பது நீர் சற்று குறைந்த பிறகு இரண்டாவதாக நீர் கட்டுதல். பொதுவான நெல்முறையில் நெல்லுக்கான இடைவெளி அதிகம். ஒரு குழிக்கு மூன்று முதல் ஏழு நாட்கள் வரை வைக்கலாம்.

மனிதர்கள் மூலம் களையை நீக்குதல். தண்ணீர் எப்போதும் இரண்டு முதல் இரண்டு புள்ளி ஐந்து சென்டிமீட்டர் வரை வயலில் நிற்கும் இவ்வாறு SRI மற்றும் பொதுவான நெல் வளர்ப்பை ஒப்பிட்டு, SRI-ன் பலன்களை எடுத்துக் கூறி விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# வேளாண் துறையின் உழவரைத்தேடி வேளாண்மை திட்டம்



நாமக்கல், ஜன.13

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரத்திலுள்ள உஞ்சனை கிராமத்தில் தமிழக அரசின் உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வேளாண்மை துணை இயக்குநர் ஜெயமாலா, விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் அரசு மானிய திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்களை பெற்றுக்கொள்ள கேட்டுக் கொண்டார். மேலும் பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் மற்றும் அதனை நிவர்த்தி செய்யும் முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

வேளாண் உதவி அலுவலர் மா.பூபதி, இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் மானிய விவரங்கள் போன்றவற்றை விவசாயிகளுக்கு தெளிவாக விளங்கி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ரகுநாதன், ராஜராஜன், ராஜாராம், ராஜேஸ்வரன், சதீஷ், சஞ்சய், சசிகுமார், சதிஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிர்களை தாக்கக்கூடிய பூச்சி மற்றும் நோய் அறிகுறிகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடு ஆகியவற்றை விளக்கமாக கூறினார்.

மேலும் இம்மாணவர்கள் எலச்சிபாளையம் வட்டாரத்தில் இரு மாதங்களுக்கு கிராமப்புற அனுபவ பயிற்சி மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# திரவ உயிர்உரம் (LIQUID BIO-FERTILIZERS) - ஒரு பார்வை



உயிர் உரங்கள் திட நிலையிலிருந்து தற்போது திட, திரவ நிலைக்கு தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்கள், தனியார் உரக்கடைகளில் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. உயிர் உரங்கள் என்பன பயிர்களுக்கு நன்மை செய்யும் நுண்ணு யிர்கள் கொண்ட உயிரியல் தயாரிப்புகளாகும். இவை பயிர் களுக்கு கிட்டா நிலையில் சத்துகளை எளிதில் கிட்டும் நிலைக்கு மாற்றி அளிப்பவையாகும். பயிர் வளர்ச்சி ஊக்கி களைச் சுரந்து பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்கின்றன.

**திரவ உயிர் உரங்கள் என்னென்ன?**

1) திரவ அசோஸ்பைரில்லம் (நெல், இதர பயிர்கள்)

2) திரவ பாஸ்போ பாக்டீரியா

3) திரவ பொட்டாஷ் பாக்டீரியா

4) திரவ ரைசோபியம் (பயறு, நிலக்கடலை)

5) திரவ துத்தநாக பாக்டீரியா.

**பரிந்துரைக்கப்பட்ட அளவுகள்?**

1) விதை நேர்த்தி = 50மி.லி/ ஏக்கர்

2) நாற்று நனைக்க = 150மி.லி/ ஏக்கர்

3) நேரிடையாக வயலில் இடுதல் = 200 மி.லி/ எக்கர்

4) இலைவழி தெளிப்பு = ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி கலந்து (FOLIAR SPRAY)

**திரவ உயிர் உரங்களை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை.**

1) பூச்சி/ பூஞ்சானக்கொல்லி பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை 24 மணி நேரம் கழித்து, உயிர் உரத்தை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

2) பாட்டில் கலனை திறந்த உடனே முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

3) உயிர் உரங்களை பயன்படுத்தும் வரை ஈரம் மற்றும் வெளிச்சம் இல்லாத இடங்களில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

4) இதை இரசாயன உரங்களுடன் கலக்கக்கூடாது.

5) காலாவதி தேதிக்கு (EXPIRY DATE) முன்னர் பயன்படுத்திட வேண்டும்.

6) 20 டிகிரி வெப்ப நிலையில் சேமிக்க வேண்டும்.

**திரவ உயிர் உரங்களை பயன்படுத்தினால் ஏற்படும் நன்மைகள்?**

1) மண்ணில் கிட்டா நிலையில் உள்ள பேரூட்ட, நுண்ணூட்ட சத்துகளை கரைந்து பயிர்களுக்கு கிடைக்கிறது.

2) பயிர் வளர்ச்சியினைத் தூண்டும் வளர்ச்சி ஊக்கிகள் உயிர் உரங்கள் மூலமாக கிடைக்கின்றன.

3) சாகுபடி செலவை குறைப்பதோடு மண் வளத்தை காக்க உதவுகின்றன.

4) பயிர்களின் வேர்பகுதியில் பிற நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் பெருக்கத்தை ஊக்குவிக்கிறது.

5) சுற்றுப்புற சூழலுக்கேற்றது.

திரவ உயிர் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் மானிய விலையில் வழங்கப்படுகிறது. அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

வாங்கி பயன்படுத்தி சாகுபடி செலவை குறைப்போம். மண் வளத்தை காப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# டிஜிட்டல் பயிர் சர்வே பணியினை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு



இராணிபேட்டை, ஜன.13

இராணிபேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலமாக தற்போது ராபி பருவத்திற்கான டிஜிட்டல் பயிர் சாகுபடி கணக்கு எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணியினை இராணிபேட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆய்வு செய்தார். அவர் கூறுகையில், வாலாஜா வட்டாரத்தில் டிஜிட்டல் பயிர் சர்வே பணியினை மேற்கொள்ள விருப்பமுள்ள தன்னார்வலர்கள், ஆர்வமுள்ள விவசாயிகள், விவசாயிகள் குடும்ப உறுப்பினர்கள் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள கேட்டுக் கொண்டார்.

இப்பணிப்புரிய ஆர்வமுள்ளர்கள் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.திலகவதியின் வாட்ஸ் ஆப் எண்ணில் (94437 12963) தங்களது பெயர், செல்போன் எண், கிராமம் ஆகிய விவரங்களை தெரிவித்து பங்கேற்க அழைக்கப் படுகிறார்கள்.

தன்னார்வலர்கள் டிஜிட்டல் பயிர் சாகுபடி கணக்கு எடுக்கும் பணி மேற்கொள்ள ஆண்ராய்டு செல்போன் வைத்து இருக்க வேண்டும். தாங்கள் குடியிருக்கும் பகுதியில் உள்ள வருவாய் கிராமங்களி லேயே இப்பணி மேற்கொள்ளலாம்.

டிஜிட்டல் பயிர் சாகுபடி கணக்கு எடுக்கும் பணிக்கு, ஒரு நில உட்பிரிவுக்கு ரூ.3 /- வீதம் தங்களது பணிக்கான தொகை தங்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். ஒரு நாளைக்கு ஒரு நபர் 500 உட்பிரிவுகளை கணக்கு எடுக்க வாய்ப்பு உள்ளது. எனவே ஒரு நபர் ஒரு நாளைக்கு ரூபாய் 1,500 /- வரை வருமானம் பெற வாய்ப்பு உள்ளது.

டிஜிட்டல் பயிர் சாகுபடி கணக்கு எடுக்கும் பணியில் ஈடுபடும் தன்னார்வலர்கள் பயிர் சாகுபடி செய்துள்ள நிலங்களில் புகைப்படம் எடுக்கும் போது ஒத்துழைப்பு வழங்கவும், இப்பணி சாகுபடி

செய்துள்ள விபரங்கள் துள்ளியமாக கணக்கு எடுப்பதால் விவாயிகள் பயன்பெறலாம் எனவும் விவசாயிகள் பங்கு பெற்று ஒத்துழைப்பு வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறாகள் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

வாலாஜா வட்டாரத்தில், அனந்தலை கிராமத்தில், வேளாண்மை துறை அலுவலர்கள் மேற்கொண்ட டிஜிட்டல் பயிர் சர்வே பணியினை இராணிபேட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆய்வு செய்தார்.

வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.திலகவதி உடனிருந்தார்.



# வெள்ள பாதிப்பின் போது மேற்கொள்ள வேண்டிய பண்ணை பாதுகாப்பு பணிகள்

**பண்ணை பாதுகாப்பு பணிகள்**

1. பண்ணைக் கருவிகள், மாட்டுத் தீவனம், உணவு தானியங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் களைக்கொல்லி மருந்துகளை வெள்ளம் பாதிக்காத மேட்டுப்பாங்கான இடத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. மாட்டுத் தொழுவங்களின் கதவுகளை திறந்து வைக்க வேண்டும். இதனால் அதிகளவில் நீர் வந்தால் கால்நடைகள் தப்பிக்க ஏதுவாகும்.

3. கட்டிடங்களின் கதவுகள் மற்றும் ஜன்னல்களை திறந்து வைக்க வேண்டும்.

4. மின் மோட்டார்கள் மற்றும் மின்னணு சாதனங்களை மேட்டுப்பாங்கான பகுதிகளுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

5. வெள்ளத்தின் போது அனைத்து கட்டிடங்களிலுள்ள மின்சாரத்தை துண்டிக்க வேண்டும்.

6. நீர் கடத்தும் பைப்புகள், எரிபொருள் டாங்குகள் மற்றும் தனித்தனியாக உள்ள கருவிகள் மற்றும் பொருள்களை ஒன்றோ டொன்று இணைத்து கட்டி வைக்க வேண்டும்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சில முக்கிய குறிப்புகள்**

1. அனைத்து வடிகால் பகுதிகளையும் திறந்து வைக்க வேண்டும்.

2. ஈரமான பகுதிகளில் மண் கடினத்தன்மையை தவிர்க்க கனரக வாகனங்கள் மற்றும் கனரக பண்ணைக்கருவிகள் செல்வதை தடுக்க வேண்டும்.

3. நீர்ப்பிடிப்புள்ள மண் கண்டப்பகுதிகளில் மண்பரப்பினை மூடி பயிர்கள் வளருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. வெள்ளம் பாதித்த பகுதிகளில் பண்ணை கழிவு மற்றும் தொழு உரங்களை இட்டு உழவு செய்ய வேண்டும்.

5. வெள்ள பாதிப்பால் மண்ணின் சத்துக்கள் குறைய வாய்ப்பு உள்ளது. எனவே மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து மண்ணின் சத்துகளின் புதிய நிலை அறிந்து அதன்படி உரங்கள் இட வேண்டும்.

6. வெள்ளத்தால் ஏற்பட்ட வண்டல் பகுதிகளை அப்புறப்படுத்தக் கூடாது. நன்கு காய்ந்தவுடன் இந்த வண்டல் பகுதிகளை பரப்பி உழவு செய்தால் மண் நலம் மேம்படும்.

7. ஆழ உழவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு சேலம் மாவட்டம், தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்.

# பங்கேற்பு கிராம மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, ஜன.13

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சியில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண் கல்லூரி மாணவிகள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் மணிகண்டம் ஊராட்சியில் பங்கேற்பு கிராம மதிப்பீடு (PRA) மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



இந்த நிகழ்ச்சியின் மூலம், இயக்க வரைபடம் (Mobility map), செல்வ நிலை வகைப்பாடு (Wealth Ranking), தினசரி செயல் (Daily Activity Clock), (Problem Tree), வென் வரைபடம் (Venn Diagram), முழு கிராமத்தின் வள மற்றும் சமூக வரைபடம் (Resource & Social Map), காலவரிசை நிகழ்வுகள் (Timeline) மற்றும் வட்ட வரைபடங்கள் (Pie Charts) ஆகியவை கிராம மக்கள் முன் விளக்கப்பட்டன. இதன் மூலம் மணிகண்டம் கிராம மக்கள் தங்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பெற்றனர்.



# இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு மற்றும் பொங்கல் விழா




தஞ்சாவூர், ஜன.13

தஞ்சாவூர் மாவட்டம், மேலாலூரில் அமைந்துள்ள இப்கோ இ-பஜாரில் இப்கோ நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் பொங்கல் விழாவும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பருத்தியப்பர் கோவில் கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். கிராமத் தலைவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி சரவணன், கலந்து கொண்டு, நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா உள்ளிட்ட நானோ மற்றும் திரவ உரங்களின் பயன்கள், பயன்பாட்டு முறைகள் மற்றும் பல்வேறு பயிர்களில் கிடைக்கும் சிறந்த விளைவுகள் குறித்து விரிவாக விளக்கினார். நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவுகள் குறையும், மண்வளம் பாதுகாக்கப் படும் என்பதே அதன் முக்கிய நன்மை என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். தொடர்ந்து, இப்கோவின் சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டம் குறித்து அறிமுகப்படுத்தி, நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், நானோ உரங்களை துல்லியமாகவும் திறம்படவும் தெளிப்பதற்காக இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன் படுத்தலாம் என்றும், நானோ உரங்களுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளை ஒருங்கிணைத்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கலாம் என்றும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார். நிகழ்ச்சியின் இறுதியில், விவசாயிகளைப் போற்றும் வகையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டு, அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

திருச்சி, ஜன.13

இலைவழியே ஊட்டச்சத்துக் கரைசல் தெளிப்பதன் மூலம் திரட்சியான நிலக் கடலைகளைப் பெற்று கூடுதல் மகசூல் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்து உள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது சாகுபடி செய்துள்ள நிலக்கடலைப் பயிரில் அதிக மகசூல் பெற்றிட, பூக்கும் தருணத்தில் பூக்கள் உதிர்வதைத் தடுத்து, பூக்கள் மிகுதியாக பூக்கச் செய்து, அறுவடையின் போது திரட்சியான நிலக் கடலைகளைப் பெற்று கூடுதல் மகசூல் பெறுவதற்கு இலைவழியே ஊட்டச்சத்துக் கரைசல் தெளிப்பது ஒரு முக்கிய தொழில் நுட்பமாகும்.

**ஊட்டச்சத்துக் கரைசல் தயார் செய்தல்**

ஒரு ஏக்கர் நிலக்கடலை பயிருக்கு ஒரு கிலோ டி.ஏ.பி, 400 கிராம் அம்மோனியம் சல்பேட் 200 கிராம் போராக்ஸ் ஆகிய வற்றை, தெளிப்பதற்கு முதல் நாள் இரவே 15 லிட்டர் நீரில் ஊற வைத்து மறுநாள் காலை அக்கரைசலை வடிகட்டிக் கிடைக் லிட்டர் நீரில் ஊறவைத்து தேவையான நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாகத் தயார் செய்திடல் வேண்டும்.

இந்தக் கரைசலை விதைத்த 25-ஆம் நாள் ஒரு முறையும், 35-ஆம் நாள் மறுமுறையும் ஆக இரு முறை தெளிக்க வேண்டும். இக்கரைசலுடன் பிளானோபிக்ஸ் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 140 மி.லி. கலந்து தெளிக்கவும். ஊட்டச்சத்துக் கரைசல் தெளிக்கும் பொழுது பரிந்துரைக்கப்பட்ட உரங்களின் அளவு சரியாகவும் வயலில் ஈரப்பதம் இருக்கு மாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**ஜிப்சம் இடுதல்**

நிலக்கடலைப்பயிரில், விதைத்த 45ம் நாளில் இரண்டாம் களை யெடுத்து மண் அணைக்க வேண்டும். இதனால் நிலக்கடலைப் பயிரின் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்கும். மேலும் திரட்சி யான எண்ணெய்ச் சத்து மிக்க காய்கள் பெறுவதற்குச் சுண்ணாம் புச்சத்து மற்றும் கந்தகச்சத்து ஆகியன தேவைப்படுகின்றன. எனவே 45-ம் நாள் நிலக்கடலைக்கு மண் அணைப்பதற்கு முன் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு, களைகள் நீக்கி, செடிகளைச் சுற்றி நன்கு மண் அணைத்துவிட வேண்டும். இதனால் நிலக்கடலைப் பயிரின்

விழுதுகள் நன்கு மண்ணுக்குள் இறங்கி அறுவடையின் போது திரட்சியான மற்றும் எண்ணெய்ச்சத்து மிகுந்த நிலக்கடலை கிடைக்கும். இதனால் விவசாயிகளுக்கு அதிக மகசூலும் லாபமும் கிடைக் கின்றன. எனவே விவசாயிகள் நிலக்கடலைப் பயிரில் ஊட்டச் சத்துக் கரைசலைத் தெளித்தல் மற்றும் ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் ஆகிய இரு முக்கிய தொழில்நுட்பங்களை பயன் படுத்தி மகசூலை அதிகரித்து இலாபம் அடைந்திடுமாறு திருச்சிராப் பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

# கிராமப்புற மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண்மை கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாயாண்டிப்பட்டி கிராமத்தில், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி வேளாண்மை மாணவிகள் சார்பில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) வெற்றிகரமாக நடத்தப்பட்டது. கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் அவர்களின் வேளாண்மை சார்ந்த தேவைகள், வளங்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகளை அறிந்து, அதற்கான தீர்வுகளை கண்டறியும் நோக்கில் இந்த ஊணயூபு செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வின் போது கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு, தங்களது அனுபவங் கள் மற்றும் கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

PRA ஆய்வின் ஒரு பகுதியாக, சமூக வரைபடம், வள வரைபடம், பருவகால நாட்காட்டி, பிரச்சினை தரவரிசை மற்றும் குழு விவாதங்கள் போன்ற பல்வேறு ஊணயூபு கருவிகள் பயன்படுத்தப் பட்டன. இதன் மூலம் மாயாண்டிப்பட்டி கிராமத்தின் வேளாண்மை நிலை, நீர்வள பயன்பாடு, பயிர் சாகுபடி முறை, வேலைவாய்ப்பு நிலை மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் தனித்தனியாக குழு விவாதங்களில் பங்கேற்று, கிராமத்தின் உண்மையான நிலைமைகளை வெளிப்படுத்தினர்.

இந்த PRA ஆய்வின் மூலம், கிராமத்தில் பொது கழிப்பிடம், உரக்கடை, கால்நடை மருத்துவ மனை, நெல் கூடாரம் இல்லை போன்றவை முக்கிய பிரச்சினைகளாக கண்டறியப்பட்டன. இதனைத் தொடர்ந்து, வேளாண்மை மாணவிகள் கிராம மக்களுக்கு மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் சேமிப்பு முறைகள், மண் பரிசோதனை மற்றும் உர மேலாண்மை, அரசு வேளாண்மை திட்டங்கள் மற்றும் கண்டறியப்பட்ட பிரச்சனை களுக்கான தீர்வு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த PRA செயல்முறை மூலம், கிராம மக்கள் தங்களது பிரச்சினைகளைத் தாங்களே பகிர்ந்து கொள்வதில் நம்பிக்கை பெற்றதுடன், கிராம வளர்ச்சி தொடர்பான எதிர்கால நடவடிக்கை களுக்கான ஒரு உறுதியான அடித்தளம் உருவாக்கப்பட்டது. மாயாண்டிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற இந்த கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு, கிராம வளர்ச்சி மற்றும் வேளாண்மை முன்னேற்றத் திற்கான ஒரு பயனுள்ள முயற்சியாக அமைந்ததாக தெரிவிக்கப் பட்டது. இந்நிகழ்ச்சியை மாணவிகள் அபிநயா.ஏ, லூமென் கிறிஸ்டி, ஆதிஸ்ரீ, முகிலா, அபிநய ஈஸ்வரி, ஆனந்தி, அகல்யா, எக்தா, அரினி, அக்ஷய கிருத்திகா, அபிநயா.மா, அனுஷ்கா, அனிஷ்கா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# இயற்கை முறையில் சாகுபடி முறையை அறிந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.13

நாமக்கல் மாவட்டம், திருச்செங் கோடு வட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் கிராமப்புற வேளாண்மை அனுபவ பயிற்சி திட்டத்தில் பிஜிபி வேளாண் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் கிராமத்தில் விவசாயிகளிடம் அனுபவ பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் மல்லசமுத்திரத்தில் உள்ள நாகர்பாளையத்தில் பழனிவேல் So.ஆறுமுகம் என்ற இயற்கை விவசாயை சந்தித்து இயற்கை முறையில் வெங்காயம், வெண்டை, மரவள்ளி ஆகிய பயிர்களை இயற்கை முறையில் சாகுபடி செய்யும் முறையை அறிந்து கொண்டனர். மேலும் மீன் அமிலம், பஞ்சகவ்யா மற்றும் மன்புழு உரம் தயாரிப்பு முறையை அறிந்து கொண்டனர். இதன் மூலம் விவசாயியின் அனுபவத்தையும் உழைப்பையும் பகிர்ந்து கொண்ட தோடு மாணவர்களின் ஒரு சில குறிப்புகளை விவசாயியும் கேட்டறிந்து கொண்டார்.

# மீன் கழிவும் மகசூலும்

# வேளாண் மாணவர்களால் மீன் அமிலம் தயாரிப்பு

கடலூர், ஜன.13


கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த ஞூரா ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் JK Batch மாணவ மாணவிகள், ELAGR 401 - Agriculture Waste Management மற்றும் ELAGR 402 - OrganicProduction Technology (Experiential learning – அனுபவ



வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.



இந்த பயிற்சியில் மொத்தம் 50 மாணவர்கள் பங்கேற்று, வேளாண் கழிவுகளை பயனுள்ள உயிர் உரமாக மாற்றும் நடைமுறை அறிவை பெற்றனர்.



**மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறை (Fish Amino Acid Preparation Procedure)**

**தேவையான பொருட்கள்**

1. மீன் கழிவுகள் (தலை, எலும்பு, உள்ளுறுப்பு) – 1 பங்கு
2. வெல்லம் / நாட்டு சர்க்கரை – 1 பங்கு
3. பிளாஸ்டிக் அல்லது மண் தொட்டி
4. சுத்தமான துணி அல்லது மூடி



**தயாரிப்பு நடைமுறை**

1. மீன் கழிவுகளை சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும்.
2. அதே அளவு வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை எடுத்துக் கொள்ள வேண்டும்.
3. மீன் கழிவுகள் மற்றும் வெல்லத்தை தொட்டியில் அடுக்காக சேர்க்க வேண்டும்.
4. கலவையை நன்கு கலந்து, வாயு வெளியேறாத வகையில் நன்கு மூடி வைக்க வேண்டும்.
5. இதனை நிழலான இடத்தில் 21-30 நாட்கள் வைத்திருக்க வேண்டும்.
6. இடையே 3-4 நாட்களுக்கு ஒருமுறை கலவையை மூடி வைத்தபடியே நன்கு குலுக்கி வைத்திட வேண்டும்.
7. புளிப்பு முடிந்த பிறகு, நைலான் வலை (nylon mesh) மூலம் வடிகட்டி எடுக்க வேண்டும்.



**பயன்பாடு**

● 1 லிட்டர் தண்ணீரில் 5 மில்லி மீன் அமிலம் கலந்து தெளிக்க வேண்டும்.

● பாசன நீருடன் கலந்து பயன்படுத்தலாம். (இந்த முறையில் பயன்படுத்தும் போது குறைந்தது 5 கிலோ மீன் மற்றும் 5 கிலோ வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட திரவம் பயன்படுத்த வேண்டும்.)

**மீன் அமிலத்தின் முக்கியத்துவம்**

மீன் அமினோ அமிலம் என்பது இயற்கை முறையில் தயாரிக்கப்படும் ஒரு திரவ உயிர் உரமாகும். இது தாவர வளர்ச்சிக்கு தேவையான அமினோ அமிலங்கள், நைட்ரஜன் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளை வழங்கி, பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் மேம்படுத்துகிறது. குறிப்பாக இயற்கை மற்றும் கரிம வேளாண்மையில் இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

தகவல் : **நிதிஷ் குமார் க, IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.**

## விவசாய கண்காட்சியில் உயிர் உரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தினர்



கிருஷ்ணகிரி, ஜன.13

விவசாயிகளின் உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், சின்னமட்டாரப் பள்ளி கிராமத்தில் வேளாண் கண்காட்சி அதியமான் வோளண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி கல்லூரியைச் சேர்ந்த பன்னிரண்டு மாணவிகள் கொண்ட குழு நடத்தினர். இக்கண்காட்சியில் பேசில்லஸ், அரிசி நீர் (மாவுப்பூச்சி மேலாண்மை), இயற்கை பூச்சிக்கொல்லி (3G கரைசல், வேப்பிலை கரைசல்) சல்பாஸ், பயோ NPK, ரைசோபியம், மைதா கரைசல், மஞ்சள் ஒட்டும் பொறி, வாழைக் கழிவு உரம், பெரோமோன் பொறிகள், ஆமணக்கு கரைசல், அமிர்த கரைசல், OWDC, பேசி லோமைசிஸ், குழித்தட்டு, சோலார் விளக்கு பொறி, பாதுக்காக்கப் பட்ட சாகுப்படி, VAM. Eco fungal. NPK. மீன் அமிலம், மண்ணில்லா விவசாயம் மற்றும் பல பொருட்கள் இக்கண்காட்சியில் வைக்கப்ப ட்டன. இதன் மூலம் சிறு குறு விவசாயிகள் பயனடைந்தனர்.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அரசு மேல்நிலைப் பள்ளியில் விழிப்புணர்வு முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சிராப்பள்ளி, ஜன.13

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், செங்கட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்காக வேளாண்மை தொடர்பான விழிப்புணர்வு முகாம் நாளந்தா வேளாண்மை கல்லூரியின் மாணவர்களான ஜே.மைக்ளின் ஜோஷி, மு.சோபிகா, பா.சுபஸ்ரீ, க.தமிழரசி, மு.தனுஷியா, கா. வெண்முகில், செ.சுவாதி ஆகியோரால் சிறப்பாக நடத்தப்பட்டது. இம்முகாமின் முக்கிய நோக்கம், மாணவர்களுக்கு வேளாண்மை என்றால் என்ன, அதன் முக்கியத்துவம், கல்வி வாய்ப்புகள் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்து தெளிவான புரிதலை ஏற்படுத்துவததாக இருந்தது.




**பள்ளி நிலை முதல் வேளாண்மை கல்வியை எப்படி தொடங்கலாம்.**

10, 12 ஆம் வகுப்பிற்குப் பிறகு தேர்வு செய்யக்கூடிய பாடப்பிரிவுகள் Biology, Maths, Vocational agriculture போன்ற குழுக்கள் பற்றிய விளக்கம்

- டிப்ளமோ, பட்டம் மற்றும் முதுநிலை வேளாண்மை படிப்புகள்
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் பிற வேளாண்மை கல்லூரிகள்
- வேளாண்மை சார்ந்த துறைகள் – தோட்டக்கலை, கால்நடை, மீன்வளம், பால் தொழில், உயிரியல் தொழில்நுட்பம்
- நவீன வேளாண்மை தொழில்நுட்பங்கள் – ட்ரோன், துல்லிய வேளாண்மை, இயற்கை வேளாண்மை
- வேளாண்மை தொழில் முனைவோர் வாய்ப்புகள் (Agri Entrepreneurship)

**வேலைவாய்ப்புகள் குறித்து விளக்கம்**

- வேளாண்மை அலுவலர்
- தோட்டக்கலை அலுவலர்
- கால்நடை மருத்துவ உதவியாளர்

- வேளாண்மை விரிவாக்க அலுவலர்
- வேளாண்மை ஆய்வாளர்
- விதை, உரம், பூச்சிக்கொல்லி நிறுவனங்களில் வேலை
- FPO, NGO, தனியார் நிறுவனங்களில் வேலை
- சொந்தமாக விவசாயம் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள்

**போட்டித் தேர்வுகள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகள்**

- TNPSC - Group II, Group III, Group IV
- UPSC - Indian Forest Service, Agriculture related services
- TNAU நுழைவுத் தேர்வுகள்
- ICAR - AIEEA
- வங்கி தேர்வுகள் (IBPS, SBI)
- SSC தேர்வுகள்

**மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரை**

- பள்ளி பருவத்திலிருந்தே இலக்கை நிர்ணயித்து படிப்பைத் தொடர வேண்டும்
- தினசரி செய்தித்தாள் வாசிப்பு மற்றும் பொது அறிவு வளர்ப்பு
- போட்டித் தேர்வுகளுக்கான திட்டமிட்ட தயாரிப்பு
- வேளாண்மையை ஒரு தொழிலாகவும், சேவையாகவும் பார்க்க வேண்டும்.

இந்த விழிப்புணர்வு முகாம் மூலம் மாணவர்களுக்கு வேளாண்மை துறையின் பரந்த வாய்ப்புகள் குறித்து தெளிவான புரிதல் கிடைத்தது. மேலும், வேளாண்மை கல்வி மூலம் வாழ்க்கை இலக்குகளை அடைந்து அரசு பணிகளில் சேர முடியும் என்ற நம்பிக்கையும் மாணவர்களிடையே உருவானது.

## பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடு – விழிப்புணர்வு நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜன.13



இராமநாதபுரம் மாவட்டம், திருச்சுழி வட்டாரம், கல்லூரணி அருகே அமைந்துள்ள குள்ளம்பட்டி கிராமத்தில், கமுதி அருகிலுள்ள பேரையூர் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள், ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கான முக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடுகள் (Pesticide Toxicity Labels) குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. குறிப்பாக, பூச்சிக்கொல்லி மருந்து பாட்டில்களின் பின்புறத்தில் காணப்படும் முக்கோண வடிவ குறியீடுகள் மூலம் மருந்துகளின் நச்சுத்தன்மை நிலைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதையும், அந்த குறியீடு களை எவ்வாறு சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் மாணவிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், அதிக நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தும் போது மனித உடல்நலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இவ்வகை பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது கையுறை (Gloves), முககவசம் (Mask), காலுறை (Shoes), நீள கை சட்டை மற்றும் நீள கால்சட்டை போன்ற பாதுகாப்பு உபகரணங்களை கட்டாயமாக பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம், பூச்சிக்கொல்லி மருந்து களை பாதுகாப்பாக பயன்படுத்துவதன் அவசியம் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மேலும் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்ததுடன், பாதுகாப்பான மற்றும் பொறுப்பான வேளாண் நடைமுறைகளை ஊக்குவிக்கும் முயற்சியாக கருதப்பட்டது.

